# “ இலங்கையில் சிறுவர் கல்வி உரிமையும் நடைமுறைகளும் - ஐக்கிய நாடுகள் சபை பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் மெய்யியல் பகுப்பாய்வு ”

பெயர் : செல்வி தவராசா சுதர்சிகா

பதிவு இலக்கம் : **EU/IS/2018/AC/367**

சுட்டெண் : **CS8767**

LIBRARY
14 MAY 2025
EASTERN UNIVERSITY, SRI LANKA

மெய்யியல் சிறப்புக் கற்கையின் கலைமாணிப் பட்டத்தின் ஒரு பகுதித் தேவையினை நிறைவு செய்யும் பொருட்டு கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

FAC1524
Project Report
Main Library, Eastern University, Sri Lanka

தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை,

கலை கலாசார பீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம்,

இலங்கை.

2024.

# ஆய்வுச்சுருக்கம்

எந்த ஒரு நாட்டின் முழுமையான அடிப்படை வளர்ச்சிக்கு கல்வியே இன்றியமையாத கருவியாகும். அதிலும் குறிப்பாக சிறுவர் கல்வியானது அதன் அத்திவாரமாகக் காணப்படுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டே கன்னங்கரா அவர்களினால் இலவசக் கல்வியானது இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கையில் முன்னெடுக்கப்படுகின்ற இலவசக் கல்விக் கொள்கையினால் ஆரம்ப நிலைப் பாடசாலைக்குச் செல்கின்ற அனைத்துக் குழந்தைகளும் கல்வியறிவினைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பதனால் தெற்காசியாவில் அதிகளவு கல்வியறிவு உள்ள நாடுகளில் இலங்கையும் ஒன்றாகக் காணப்படுகின்றது.

சிறுவர்களைப் பாதுகாப்பதற்கு உலகில் பல்வேறுபட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபையின் உருவாக்கத்தோடு சிறுவர்களைப் பாதுகாத்தல், அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தல் தொடர்பான சாசனங்கள் உருவாக்கப்பட்டு, உலக நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. சிறுவர்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றான கல்வியினை அனைத்து சிறுவர்களுக்கும் பெற்றுக் கொடுக்க ஐக்கிய நாடுகள் சபை முயல்கின்றது.

சிறுவர் உரிமைக்கும், சிறுவர் கல்விக்கும் முக்கியத்துவம் வளங்கும் அதே வேளையில் சிறுவர் உளவியலிலும் அதீத அக்கறை செலுத்த வேண்டியுள்ளது. மனித சந்ததியின் அடிப்படை நிலையாக சிறுவர்கள் காணப்படுகின்றனர். சிறுவர்கள் எவ்வாறான மன நிலையில் வளருகின்றார்களோ அதனையே வளர்ந்ததன் பிற்பாடு அவர்களில் அவதானிக்க முடியும். பிறக்கும் குழந்தையின் மனமானது வெற்றுத் தாளினைப் போன்றது. பின் அக்குழந்தை பெற்றுக்கொள்ளும் அனுபவங்களினால் மனமானது மாற்றம் அடைகின்றது என்பது லொக்கின் கூற்றாகும். ஆயினும் குழந்தையானது கருவில் இருக்கும் போதே அனுபவங்களைப் பெற்றுக் கொள்கின்றது. அதனாலேயே கர்ப்பிணிப் பெண்களின் மனநிலைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

குழந்தையானது: குழந்தைப் பருவம், பிள்ளைப் பருவம், கட்டிளமைப் பருவம் போன்ற ஒவ்வொரு நிலைகளிலும் அதன் உடல், உள நிலைகளில் மாற்றங்களைப் பெறுகின்றது. குழந்தையின் உடல் ஆரோக்கியத்திற்கு வளங்கப்படுகின்ற முக்கியத்துவத்தினை விட குழந்தையின் உள ஆரோக்கியத்திற்கு சமூகத்தினால் முக்கியத்துவம் வளங்கப்படுவது அரிதாகும்.

சிறுவர்களின் உளநிலை பாதிக்கப்படுவதற்கு பல்வேறுபட்ட காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றது. அவற்றினுள் குறிப்பாக இடம்பெறுகின்ற சிறுவர் உரிமை மீறலே சிறுவர்களின் உடல், உள பாதிப்பிற்கு முக்கிய காரணியாக இருக்கின்றது. சமூகத்தில் இத்தகைய சிறுவர் உரிமை மீறல் தொடர்பான விழிப்புணர்வு இன்மை காரணமாக பலருக்கு சிறுவர் உரிமைகள் தொடர்பான அடிப்படை அறிவு கூட இல்லாத நிலைமை

காணப்படுகின்றது. சிறுவர்கள் உட்பட அனைத்து சமூகத்தவர்களுக்கும் சிறுவர் உரிமைகள் தொடர்பான அறிவு இருத்தல் அவசியமானதாகும். இத்தகைய அறிவு இல்லாமையால் பல சிறுவர்கள் தங்களின் உரிமையானது மீறப்படுவதனை அறியாமலே இருக்கின்றனர்.

இதனடிப்படையில் சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர் கல்வியினை உறுதிப்படுத்துவதில் ஐக்கியநாடுகள் சபையின் பிரகடனங்கள், அதற்காக இலங்கையில் காணப்படுகின்ற சட்ட ஒழுங்குகள், நடைமுறைகளை மெய்யியல் ரீதியாக நோக்குவதாக இந்த ஆய்வானது காணப்படுகின்றது.

இதனை மையமாகக் கொண்டு இந்த ஆய்வானது “ இலங்கையில் சிறுவர் கல்வி உரிமையும் நடைமுறைகளும் - ஐக்கிய நாடுகள் சபை பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் மெய்யியல் பகுப்பாய்வு ” எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாய்வானது ஆறு அத்தியாயங்களை உள்ளடக்கியுள்ளது. முதலாவது அத்தியாயத்தில் ஆய்வு எந்தப் பிரச்சினையை மையப்படுத்தி, என்ன நோக்கத்திற்காக, எந்தெந்த முறையியலினூடாக மேற்கொள்ளப்படுகின்றது என்பதனை விளக்கும் ஆய்வு அறிமுகமாகவும் ஆய்வுப் பிரச்சினை, ஆய்வின் நோக்கம், ஆய்வுக் கோட்பாடு, ஆய்வு முறையியல், தரவு சேகரிக்கும் முறைகள், இலக்கிய மீளாய்வு போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. மேற்கொள்ளவிருக்கும் ஆய்வு தொடர்பான அறிவினைப் பெறுவதற்கு இந்த அத்தியாயம் உதவுகின்றது.

இவ்வறிக்கையின் இரண்டாவது அத்தியாயத்தில் சிறுவர் கல்வியின் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. சிறுவர்களின் வயதும் காலகட்ட அறிவு விருத்தி பற்றியும், சிறுவர் கல்விக்கு சமூகத்தில் இருக்கும் முக்கியத்துவம் மற்றும் சிறுவர் கல்வி இன்மையால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

மூன்றாவது அத்தியாயத்தில் சிறுவர் உளவியல் பற்றிய விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. பிள்ளைகளின் ஒவ்வொரு நிலையும் அந்நிலைகளில் உளவியல் செயற்பாடுகள் பற்றி விளக்கப்பட்டுள்ளது. மற்றும் விசேட தேவையுடைய மாணவர்கள் தொடர்பான விடயங்களை உள்ளடக்கியததாக இவ்வத்தியாம் காணப்படுகின்றது.

நான்காவது அத்தியாயமானது ஐக்கிய நாடுகள் சபை பிரகடனத்தின் சிறுவர் உரிமைகள் பற்றி ஆராயப்பட்டுள்ளது. இங்கு சிறுவர்கள் தொடர்பான சர்வதேச வரைவிலக்கணங்கள், சிறுவர் உரிமைப் பிரகடனங்கள், சிறுவர் கல்விப் பிரகடனங்கள் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஐந்தாவது அத்தியாயமானது இலங்கையில் காணப்படும் சிறுவர் உரிமைகள், சிறுவர் கல்வி மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் பற்றி விளக்கப்பட்டுள்ளது. இலங்கையில் காணப்படும் சிறுவர் உரிமைச் சட்டங்கள் பற்றியும் இலங்கையில் காணப்படுகின்ற சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் அவற்றிற்கான சட்ட நடைமுறைகள் பற்றி விளக்குகின்றது.

ஆறாவது அத்தியாயமானது ஆய்வுப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் பெறப்பட்ட முடிவுகள், பரிந்துரைகள் மற்றும் மதிப்பீடுகளை விளக்குகின்றது.

திறவுச் சொற்கள் : **சிறுவர் உரிமைகள், சிறுவர் கல்வி, ஐக்கிய நாடுகள் சபை, சிறுவர் உரிமைப் பிரகடனங்கள்.**

# பொருளடக்கம் (CONTENTS)

DECLARATION ........ i

உறுதியுரை ........ ii

நன்றியுரை ........ iii

முன்னுரை ........ iv

ஆய்வுச் சுருக்கம் ........ v –vii

## அத்தியாயம் ஒன்று

1.0 ஆய்வு முன்மொழிவு ........ 1-12

1.1 ஆய்வுத் தலைப்பு ........ 1

1.2 ஆய்வு அறிமுகம் ........ 1-2

1.3 ஆய்வுப் பிரச்சினை ........ 2

1.4 ஆய்வு வினாக்கள் ........ 2

1.5 ஆய்வு நோக்கங்கள் ........ 3

1.5.1 உப நோக்கம் ........ 3-4

1.6 ஆய்வு முறையியல் ........ 4

1.7 ஆய்வின் முக்கியத்துவம் ........ 4

1.8 ஆய்வு வரையறை ........ 4

1.9 ஆய்வுகளின் மீளாய்வு ........ 5-11

1.10 ஆய்வு அமைப்பு முறை ........ 11-12

1.11 ஆய்வு இடைவெளி ........ 12

## அத்தியாயம் இரண்டு

2.0 சிறுவர் கல்வியின் முக்கியத்துவம் ........ 13-34

2.1 கல்வி ........ 13-14

2.2 சிறுவர் வயதும் கால கட்ட அறிவு விருத்தியும் ........ 14-16

2.2.1 ஜோன் பியாஜே இன் அறிவாற்றல் விருத்தி ........ 16-17

2.2.2 ஜோன் பியாஜே இன் பிள்ளை விருத்திப் பருவங்கள் ........ 18-22

2.3 சிறுவர் கல்வி வளர்ச்சிப் படிநிலையில் ஆரம்பக்கல்வி ........ 23-27

2.4 சிறுவர் கல்விக்கு சமூகத்தில் இருக்கும் முக்கியத்துவம் ....................27-31
2.5 சிறுவர் கல்வி இன்மையால் ஏற்படும் விளைவுகள் ..................................31-34

## அத்தியாயம் மூன்று

3.0 சிறுவர் உளவியலும் கல்வியும் ....................................................................35-51
3.1 உளவியல் ....................................................................................................3.5
3.1.1 குழந்தை உளவியல் ......................................................................................35-36
3.2 பிள்ளைகளின் நிலையும் சிறுவர் உளவியல் செயற்பாடுகளும் ............36-37
3.2.1 சிக்மன் பிரைட்டின் பாலியல் விருத்திக் கட்டங்கள் ........................37-39
3.2.2 முன்பள்ளிச் சிறுவர்களின் உளவியல் ..................................................39-41
3.2.3 ஆரம்பப் பள்ளிச் சிறுவர்களின் உளவியல் .........................................41-43
3.2.4 இடை நிலைப் பள்ளிச் சிறுவர்களின் உளவியல் ..............................43-45
3.3 விசேட தேவையுடைய மாணவர்கள் ..........................................................46
3.3.1 உடல் சார்ந்த பிரச்சினை உடைய மாணவர்கள் ...............................46-48
3.3.2 உள்ளம் சார்ந்த பிரச்சினை உடைய மாணவர்கள் ..........................48-49
3.3.3 ஒழுக்கம்/நடத்தைப் பிரச்சினை உடைய மாணவர்கள் ...................49-50
3.3.4 கற்றல் இடர்பாடுடைய மாணவர்கள் 50
3.3.5 மீத்திறன் உடைய மாணவர்கள் 50-51

## அத்தியாயம் நான்கு

4.0 ஐக்கிய நாடுகள் சபை பிரகடனத்தில் சிறுவர் உரிமைகள் ...........52-70
4.1 ஐக்கிய நாடுகள் சபை ......................................................................................52
4.1.1 சிறுவர்கள் தொடர்பான சர்வதேச வரைவிலக்கணங்கள் ................53-54
4.2 சிறுவர் உரிமைப் பிரகடனங்கள் ......................................................................54
4.2.1 சிறுவர்களுக்கான உரிமைகள ..........................................................54-57
4.2.2 சிறுவர் உரிமை பற்றிய முக்கிய பிரமாணங்கள் ..............................58-64
4.3 சிறுவர் கல்விப் பிரகடனங்கள் ..........................................................................65-70

## அத்தியாயம் ஐந்து


5.0 இலங்கையில் சிறுவர் உரிமையும் கல்வியும் ........................................71-88

5.1 இலங்கையில் சிறுவர் கல்வி ........................................71-72

5.2 இலங்கையில் சிறுவர் உரிமை ........................................72-74

5.3 சிறுவர்களுக்கான சட்ட ஏற்பாடுகள் ........................................75

5.3.1 சிறுவர்களுக்கான பிரத்தியேக சட்டங்கள் ........................................75-79

5.3.2 சிறுவர் குற்றவாளியை கையாளும் முறை ........................................79-81

5.3.3 சிறுவர் உரிமை மீறலை தடுப்பதற்கான வழிமுறைகள் ................81-84

5.4 இலங்கையில் சிறுவர் கல்வி தொடர்பான சட்டங்கள்,திட்டங்கள் ..........84-86

5.5 இலங்கையில் சிறுவர் கல்வியினை உறுதிப்படுத்துவதில் சவால்கள் ...87-88


## அத்தியாயம் ஆறு


6.0 தொகுப்பும் பகுப்பாய்வு ........................................89-90

6.1 தொகுப்பு ........................................89-90

6.2 பகுப்பாய்வு ........................................90-94

6.3 முடிவுரை ........................................95-97

6.4 பரிந்துரை ........................................97-99

6.5 உசாத்துணை ........................................100-104